**கோறளைப்பற்று பிரதேச சபை**

**மட்டக்களப்பு மாவட்டம்**

------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அரிக்கை 2020 ஜுன் 19 ஆம் திகதியில் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் கோறளைப்பற்று பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றிலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

#### 1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வாசகர்களால் மீள ஒப்படைக்கப்படாத ரூபா 391,801 பெறுமதியுடைய 3139 புத்தகங்களும், பழுதடைந்த 1912 புத்தகங்களும் பெறுமதி மதிக்கப்பட்டு இறுதி புத்தக இருப்பில் இருந்து கழிக்கப்படாது சொத்தாக காட்டப்பட்டு வருகின்றது. | மீள ஒப்படைக்கப்படாத புத்தகங்களும், பழுதடைந்த புத்தகங்களும் பெறுமதி மதிக்கப்பட்டு இறுதி புத்தக இருப்பில் இருந்து கழிக்கப்பட்டு காட்டபபட வேண்டும் . | ஏற்றுக்கொள்ளப்பட்டது |

### 1.3.3 பெறப்பட வேண்டியவை கொடுக்க வேண்டியவை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் முற்பணமாக கொடுக்கப்பட்ட ரூபா 949,991 தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| (ஆ) | ஒன்பது உல்லாசப் பிரயாண ஒட்டல்களிடமிருந்து அறவிட வேண்டிய திண்மக்கழிவு அகற்றல் கட்டண நிலுவை ரூபா 435,000 தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

### 1.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயாக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணம் இல.1645 மற்றும் 1646 | சபையினால் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்குரிய ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்தப் மூலப் பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படடிலுக்கவில்லை. | மாதாந்தம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

## 2 நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவீனத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 6,337,224 ஆக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவீனத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 5,573,659 தொகையாக உள்ளது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| விபரம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31திகதிய நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31திகதிய நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரி மற்றும் வரி | 10,300,000 | 402,100 | 402,100 | - | 16,672,000 | 525,790 | 525,790 | - |
| வாடகைகள் | 16,007,000 | 6,931,985 | 6,931,985 | 13,498,226 | 14,345,000 | 5,771,622 | 5,771,622 | 13,161,830 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 3,367,500 | 4,461,956 | 4,461,956 | - | 3,331,000 | 4,355,260 | 4,355,260 | - |
| ஏனைய வருமானங்கள் | 26,899,000 | 20,983,612 | 20,983,612 | 340,000 | 25,634,000 | 111,105,685 | 10,935,353 | 435,000 |
| மொத்தம் | **56,573,500** | **32,779,653** | **32,779,653** | **13,838,226** | **59,982,000** | **133,603,017** | **120,006,187** | **13,596,830** |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) **கடை வாடகை**<br>கடை வாடகை, சந்தைக் கடை வாடகை, நிலக் குத்தகை மற்றும் JCB வாடகை ரூபா 1,317,150 தொகை அறவிடப்படாது நிலுவையாக காணப்படுகின்றது. | நிலுவைகளை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

| | | |
|---|---|---|
| (ஆ) **அனுமதிப்பத்திர கட்டணங்கள்**<br>சேகரிக்கப்பட்ட தொகையினையே பட்டியலிடப்பட்ட வருமானமாக காட்டப்பட்டுள்ளதினால் இதில் நிலுவைகள் எதுவும் காட்டப்படவில்லை. | நிலுவைகளை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| (இ) **நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்**<br>மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்தும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) செயற்பாடுகளின் செயலாற்றலின் தாமதங்கள்<br>2017 ஆம் ஆண்டு கலைவாணி வீதியினையும், விபுலானந்தா வீதியினையும் இணைக்கும் வீதியினை வடிகானுடன் அமைப்பதற்காக ஓதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 02 மில்லியன் 2020 மார்ச் 31 வரையும் வீதி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படாது அப்பணம் சில்லறைக் கடன் கணக்கிலிடப்பட்டது. | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை அந்த நோக்கத்திற்கு செலவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்<br>சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 149 இன் பிரகாரம் உல்லாசப் பிரயாண சபையில் பதிவு செய்யப்பட்ட உல்லாச விடுதிகளிடம் இருந்து அவற்றின் மொத்த வருமானத்தில் 1% தீர்வையாக அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையில் பதிவு செய்யப்பட்டு பாசிக்குடா பிரதேசத்தில் இயங்கிவரும் பதினாங்கு முன்னணி உல்லாச ஹோட்டல்களில் இருந்து அறவிட வேண்டிய தீர்வைக் கட்டணம் 10 வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாமல் இருக்கின்றது. | தீர்வையை அறவிட நடவடிக்கை எடுக்கவேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| (ஆ) | 1993 ஆம் ஆண்டில் இருந்து 25 வீதியோரக்கடைகள், 27 பொதுச் சந்தைக் கடைகள், 10 கோழி இறைச்சி கடைகள், 10 பேரிடம் இருந்து பாசிக்குடா வாகன தரிப்பிடக் கட்டணம், 06 பேரிடம் இருந்து கலாச்சார மண்டபக் கட்டணம் மற்றும் 30 தனிப் பட்டவர்களிடம் இருந்து அறவிட வேண்டிய வாடகை குத்தகை நிலுவை ரூபா 12,181,066 தொகை அறவிடவோ அல்லது சட்ட நடவடிக்கை எடுக்கவோ சபை நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை. | வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்கவேண்டும். அல்லது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| (இ) | சபையில் மீளாய்வாண்டில் நடைமுறைக் கணக்கை பேணி வரும் காசேட்டின் படி ரூபா 25 மில்லியன் தொடக்கம் ரூபா 30 மில்லியன் வரையான வீச்சில் காசு மீதி கையிருப்பாக காணப்பட்ட போதிலும் இதனை வினைத் திறனான வகையில் முதலீட்டு வருமானத்தை உழைக்க நடவடிக்கை எடுக்காததால் சபையானது சராசரியாக ரூபா 02 மில்லியன் தொகை வருமானத்தை இழந்துள்ளது. | சரியான காசு மீதியை பேணி வருமானத்தை உழைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையில் தற்போது 66 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக காணப்படுகின்றனர். | ஆளணி ஆற்சேப்பு அனுமதியுடன் செய்யப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| (ஆ) | 05 வருடங்களுக்கு முன்னர் பதவியை விட்டுச் சென்ற 05 ஊழியர்களிடம் இருந்து அறிவிட வேண்டிய ரூபா 221,952 கடன் தொகையை உரிய நபர்களிடமிருந்து அல்லது பிணையாளியிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது. | உரிய கடனை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| JZ-8145ம் இலக்க தண்ணீர் பவுசர் நீர் தாங்கி பழுதடைந்த நிலையில் கடந்த 02 வருடங்களாக திருத்தப்படாது காணப்படுகின்றது. | திருத்திப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

### 3.4.2 வாகனங்களின் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒரு லீற்றர் எரிபொருளுக்கு வாகனத்தை ஓடக்கூடிய துாரத்தை இயந்திரம் பொறியியலாளரினால் வருடாந்தம் பரிசோதிக்கப்பட வேண்டும் என அரசாங்க நிர்வாக முகாமைத்துவ அமைச்சினால் EST6/TPORT/05 /3515 இலக்க 2016.12.29 ம் திகதியிட்ட 30/2016 சுற்று நிருபத்திற்கு இணங்க பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 06 மாதங்களுக்கு ஒரு தடவை பரீட்சிப்பினை மேற்கொள்ள வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 08 வாகனங்களுக்கு மோட்டார் வாகன பதிவுச் சட்டத்தின் படி பதிவுப் புத்தகங்கள் பெறப்பட்டிருக்கவில்லை | பதிவுப் புத்தகங்கள் பெறப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| (இ) | 07 வாகனங்களுக்கு போக்கு வரத்து அனுமதிப் பத்திரம் (Revenue License) இல்லை. | போக்கு வரத்து அனுமதிப் பத்திரம் (Revenue License) எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| (ஈ) | உபயோகிக்க முடியாத மாற்று நடவடிக்கை 07 வாகனங்கள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | உபயோகிக்க முடியாத வாகனங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**3.5 பெறுகை**

**3.5.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டுக்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன்படி பெறுவனவுகள் இடம் பெற்றிருக்கவில்லை. | வருடாந்தம் இத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் தயாரிக்கப்படும். |

**3.5.2 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குரிய காணியில் புதிய சந்தைக் கட்டிடத்தை அமைப்பதற்காக 2016 ஒக்டோபர் 15 ம் திகதி ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. எனினும் ஒப்பந்தகாரரால் குறித்த காணியில் நிர்மான வேலைகள் மேற்கொள்ளப்பட்டு ரூபா 924,053 பெறுமதியான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் குறித்த காணி வேறு ஒருவருக்கு சொந்தமானது என உரிமை கோரப்பட்டதினால் நிர்மான வேலைகள் ஒப்பந்தகாரரால் கைவிடப்பட்டது. எனினும் சபையானது உரிய நடவடிக்கைகளை எடுத்து காணியைப் பொறுப்பேற்று வேலையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கட்டுப்பாடு பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டம் காலாண்டுக்கொரு முறையாவது கூட்டப்பட வேண்டியிருந்தபோதிலும் மீளாய்வாண்டில் எதுவித கூட்டமும் கூட்டப்படவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் கூட்டப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |